**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 29.03.2023

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வேளாண்மை அறிவியல் நிலைய ஆண்டு செயல்திட்டங்கள் தயாரிப்பு பற்றிய கூட்டம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மற்றும் வேளாண் தொழில்நுட்ப முகமை மற்றும் ஆராய்ச்சி நிலையம், 10 வது மண்டலம், ஐதராபாத் இணைந்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வேளாண்மை அறிவியல் நிலைய ஆண்டு செயல்திட்டங்கள் தயாரிப்பு பற்றிய கூட்டம் 29.03.2023 முதல் 31.03.2023 நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தின் துவக்கவிழா நிகழ்ச்சியானது இன்று (29.03.2023) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 33 வேளாண் அறிவியல் நிலைய தலைவர்களும் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களும் கலந்து கொண்டுள்ளனர். இக்கூட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், முனைவர் வெ. கீதாலட்சுமி, வேளாண் தொழில்நுட்ப முகமை மற்றும் ஆராய்ச்சி நிலையம், 10 வது மண்டலம், ஐதராபாத்தின் இயக்குநர், முனைவர் ஷேக் என். மீரா, தமிழ்நாடு ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழகம், விரிவாக்க மையத்தின் இயக்குநர், முனைவர் இராஜாகுமார் மற்றும் தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தின் இயக்குநர், முனைவர் அப்பாராவ் ஆகியோர் பங்கேற்றனர்.

இவ்வருடாந்திர கூட்டத்தை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ. கீதாலாட்சுமி அவர்கள் துவக்கி வைத்து காலநிலை மாற்றத்தின் முக்கியத்துவத்தினை எடுத்துக்கூறினார். இப்பல்கலைக்கழகமானது வேளாண் பெருமக்களின் பயிர் சாகுபடி பிரச்சனைகளை களைவதில் முக்கியதுவத்தை அளித்து வருகிறது. முக்கியமாக, வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகளின் மூலமாக வேளாண் பெருமக்களை அவரது வயல்களிலே சென்று பயிர் சாகுபடி பிரச்சனைகளுக்கு உதவி செய்கின்றனர். மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழமானது அக்ரி போர்டல் என்ற இணையத்தில் சுமார் 12 இலட்சத்திற்கு மேலான தொழில்நுட்ப பக்கங்கள்

தற்போதைய தொழில்நுட்பத்தோடு வெளியிட உள்ளோம். துணைவேந்தர் அவர்கள், இ-விற்பனை என்ற திட்டத்தை இப் பல்கலைக்கழகம் முன்னெடுக்க உள்ளது என்பதை தெரிவித்தார்.

முனைவர். ஷேக் என். மீரா, இயக்குநர், வேளாண் தொழில்நுட்ப முகமை மற்றும் ஆராய்ச்சி நிலையம், 10 வது மண்டலம், ஐதராபாத் அவர்களுடைய தலைமையுரையில் வேளாண் அறிவியல் நிலையங்கள் சார்பாக இவ்வாண்டு (1974-2023) பொன்விழா ஆண்டாக அமைந்துள்ளது. முதல் வேளாண் அறிவியல் நிலையமானது புதுச்சேரியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் துவங்கப்பட்டது. இயக்குநர் அவர்கள் வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகளுக்கு பத்து கட்டளைகள் அடங்கிய அறிவுரைகளை வழங்கி வரும் காலங்களில் வேளாண் அறிவியல் நிலையங்கள் எவ்வாறு சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதை அறிவுறித்தினார். மேலும், வேளாண் பெருமக்களின் கதவுகளுக்கு வேளாண் அறிவியல் பற்றிய அறிவு சென்றடைய வேண்டும் என்பதை அறிவுறுத்தினார்.

முனைவர். இராஜாகுமார், இயக்குநர், விரிவாக்க மையம், தமிழ்நாடு ஜெயலலிதா மீன் வள பல்கலைக்கழகம், நாகப்பட்டினம் அவர்கள் சிறப்புரை ஆற்றும்பொழுது நாட்டில் உள்ள மீன் வளம் பற்றியும் வேளாண் அறிவியல் நிலையங்கள் மீன் வளர்ப்பு பற்றிய விளக்கங்களை வேளாண் பெருமக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்பதை வலியுறித்தினார். முனைவர். அப்பாராவ், இயக்குநர், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை அவர்கள் தனது உரையில் ஒருங்கிணைந்த பண்ணையத்தின் முக்கியதுவம் பற்றியும், வேளாண் மண்டலங்களுக்கேற்ற தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் கால்நடை வளர்ப்பு பற்றியும் தெரிவிக்க வேண்டினார்.

முன்னதாக முனைவர் பி.பொ. முருகன், இயக்குநர், விரிவாக்க மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். வருகின்ற மூன்று நாட்களில் விஞ்ஞானிகள் முதல் நிலை செயல் விளக்க திடல்கள், வயல்வெளி ஆய்வு மற்றும் விவசாயிகளின் பயிற்சி போன்ற முக்கிய தலைப்புகளை பற்றி விவாதிக்க உள்ளனர். இக்கூட்டத்திற்கு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த 33 வேளாண் அறிவியல் நிலையங்களில் இருந்து 80க்கும் அதிகமான விஞ்ஞானிகள் பங்கேற்றனர்.

இத்துவக்கவிழாவின் முடிவாக முனைவர். ந. ஆனந்தராஜா, பேராசிரியர் மற்றும் தலைவர், பயிற்சிதுறை அவர்கள் நன்றியுரையாற்றினார்

***மக்கள் தொடர்பு அலுவலர்***